Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – Vi

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 09 | 24 –12–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –310




# சமாதானப் பாதையை விட்டு விலகிச் செல்லும் அரசின் போக்கைக் கண்டித்து கிளி.யில் போராட்டம்

## நான்கு நாட்கள் வெவ்வேறு இடங்களில் நடதத கிளி. வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் தீர்மானம்

(அலுவலக செய்தியாளர்)

**சமாதானப் பாதையைவிட்டு விலகிச் செல்லும் அரசின் போக்கைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினரால் கண்டனப் பேரணிகள் நடாத்தப்படவுள்ளன. நான்கு நாட்கள் பளை, கண்டாவளை, பூநகரி கிளிநகர் ஆகிய இடங்களில் இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது. கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.**

இதன் பிரகாரம் எதிர்வரும் 28ஆம் திகதியன்று பச்சிலைப் பள்ளி, பளைப்பிரதேசத்திலும் 29 ஆம் திகதியன்று கண்டாவளைப் பிரதேசத்திலும்,30ஆம் திகதியன்று பூநகரிப் பிரதேசத்திலும், 31ஆம் திகதியன்று மாவட்டம் தழுவிய ரீதியில் கிளிநொச்சி நகரிலும் கண்டனப் பேரணிகள் நடாத்தப்பட்டு கண்டன அறிக்கைகள் கையளிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டம் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றிய, சமகால அரசியல் நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.00 மணிக்கு கிளி/அழகியற் கலாமன்றத்தில் நடைபெற்றது.

வட்டக்கச்சி,பூநகரி,அக்கராயன், முழங்காவில்,பளை, விசுவமடு,

(IVஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் மேஜர் முரளி உள்ளிட் 10 வேங்கைகளின் நினைவு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

23.12.1987 அன்று உரும்பிராய்ப் பகுதியில் இந்திய இராணுவத்துடனான நேரடிமோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் முரளி உட்பட 10 வேங்கைகளின் நினைவுதின

(IVஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் செயற்பாடுகளுக்கு திருமலையில் இராணுவம் இடையூறு

### புலிகள் – படையினர் சந்திப்பு நடத்தியும் பயனில்லை என்கிறார் எழிலன்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலைப்புலிகளின் அரசியல் போராளிகள் தங்களின் அரசியல் நடவடிக்கைகளைச் சுமுகமாக மேற்கொள்ள முடியாத விதத்தில் படையினரின் சோதனைகள் அமைந்திருப்பதாக விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கடந்த சனிக்கிழமை மாலை கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் காவலரண் பகுதியிலும் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மகிந்தபுர காவலரணிலும் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர்க்கிழக்குப் பிரதேசத்திற்கு அர

(IVஆம் பக்கம் பார்க்க)

## டைனமற் வெடி பாவித்து மீன்பிடிக்க இன்று முதல் தடை

(அலுவலக செய்தியாளர்)

வடதமிழீழக் கடற்பரப்பின் எந்தப் பகுதிகளிலும் டைனமற் வெடி மருந்தைப் பாவித்து மீன் பிடிப்பது இன்று முதல் தடை செய்யப்படுவதாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்களுடனான சந்திப்பில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12.10 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சங்கத் தலைவர்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் பிரதிநிதிகளுக்கும், கடற்றொழிலாளர் சங்கசமாசங்களின் மேலாளருக்கும் இடையிலான சந்திப்பின்போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. டைனமற் வெடிமருந்தைப் பாவித்து

(IVஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் அநாகரிகமான செயலால் 50 புலிகளின் வன்னிக்கான பயணம் ரத்து

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரின் அநாகரிகமான அணுகுமுறை காரணமாக விடுதலைப் புலிப் போராளிகளின் மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கான பயணம் நேற்றுக் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் உட்பட 20 பெண் போராளிகள் அடங்கலாக 50 போராளிகள் நேற்று மட்டக்களப்பிலிருந்து வன்னி செல்வதற்கான ஏற்பாடுகள் வழமைபோல் செய்யப்பட்டிருந்தது. செங்கலடி - பதுளை வீதியிலுள்ள கொடுவாமடுப் பாலத்திலிருந்து ஓமந்தை வரை இராணுவப் பாதுகாப்புடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பயணத்தின் நிமித்தம் விடுதலைப்புலிகள் போராளிகள் கொடுவாமடுப் பாலம் முன்னணி இராணுவ காவல் நிலையை அடைந்தபோது, அங்கு பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருந்த இராணுவ கப்டன் பெண் போராளிகளைத் தங்களுடைய இடுப்புப் பட்டிகளை கழற்றி பயணப்பையில் வைக்குமாறு கோரிக்கை விடுத்தார். தமது படைப்பிரிவிற்கு உட்பட்ட 52-2 ஹபரணைச் சந்தி வரை இடுப்புப்பட்டி அணிந்துவர தன்னால் அனு

(IVஆம் பக்கம் பார்க்க)

## மாடு தேடச் சென்ற சிறுமி பாழடைந்த கிணற்றில் வீழ்ந்து மரணம்

(தீவகம்)

யாழ்.தீவகம் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் உள்ள கைவிடப்பட்ட காணி ஒன்றினுள் அமைந்திருக்கும் பாழடைந்த கிணற்றினுள் இருந்து சிறுமி ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகலளவில் மீட்கப்பட்ட இச்சடலம் அதே இடத்தைச் சேர்ந்த முத்துக்குமரன்.நாகதர்சனா (வயது 8) என்பவருடையது என இனம்காணப்பட்டது. காணாமல்போன மாட்டினைத் தேடிச் சென்ற சிறுமியை நீண்டநேரமாகக் காணாத தாய் சிறுமியை அப்பகுதிகளில் தேடியவேளை சிறுமி கிணற்றினுள் சடலமாகக் காணப்பட்டார் எனத் தெரியவருகின்றது. (33)



## யுனிசெப் பிரதிநிதி - அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறுவர் கல்வி நிலை குறித்துப் பேச்சுவார்த்தை

(கிளிநொச்சி)

"யுனிசெப்" அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி நேற்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கிடையிலான போசாக்கின்மையின் அபாய நிலைமை பற்றியும், இவர்களின் கல்விக்கான பற்றாக்குறையான வசதிவாய்ப்புக்களினாலும், ஆசிரியர்களின் பற்றாக்குறையிலுமான பின்னடைவான கல்வி நிலைமை, அண்மைக்

(IVஆம் பக்கம்பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

நரேஸ் நற்குணராஜா, உடையார்கட்டு வடக்கு,உடையார் கட்டு. என்பவருடைய சாரதிஅனுமதிப்பத்திரம் இல A008928849 23.12.2004 புளியங்குளத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணி மனை, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல்:- ந.நற்குணராஜா. (5437)

### தவறிவிட்டது

சன்முகநாதன் தமிழ்ச்செல்வி இல 83, ஜெயந்திநகர், கிளிநொச்சி. என்பவருடைய கறுப்பு கலர் பேர்ஸ்சுடன் தேசிய அடையாள அட்டை, நிரந்தர பயண அனுமதிப் பத்திரமும் 22.12.2004 கிளிநொச்சி சந்தைக்கும், ஜெயந்தி நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வேலன் பதிப்பகம் அல்லது ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல்:- ச.தமிழ்ச்செல்வி. (5440)


- சத்தியதர்சன் பூஜிதா நினைவு -


## வலைப்பந்தாட்ட, மென்பந்துத் துடுப்பாட்டப்போட்டி வட்டக்கச்சி இளந்தளிர், என்.ஈ.சி.அணிகள் வெற்றி

கனகபுரம் விளையர்ட்டுக் கழகத்தினரின் ஆதரவில் நடைபெற்ற அமரர் சத்திய தர்சன் பூஜிதா (பூஜா) நினைவாக நடாத்தப்பெற்ற வலைப்பந்தாட்ட மற்றும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகளில் முறையே வட்டக்கச்சி இளந்தளிர், என்.ஈ.சி.அணிகள் வெற்றி பெற்று வெற்றிக்கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டன.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கனகபுரம் மைதானத்தில் நடைபெற்ற இந் நிகழ்வின் வலைப்பந்தாட்டப் போட்டி இளந்தளிர் - உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணிகளுக்கிடையே நடைபெற்றது. இதில் இளந்தளிர் அணி 13-10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக மேற்படி கழகத்தைச் சேர்ந்த பிரதீபா தெரிவாகினார்.

மென்பந்துப் போட்டியில் என்.ஈ.சி.அணி வெற்றி பெற்றது. இதனை எதிர்த்துப் போட்டியிட்ட உழவர் ஒன்றியம் அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. 15 ஓவர் முடிவில் இந்த அணி 9 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. பரமலிங்கம் 21 ஓட்டங்களையும், சுதன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரிசாந்தன் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், மயூரன் 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கிருஷ்ணா 7 ஓட்டங்களுக்குஇரு விக்கெட்டுக்களையும், தீபன் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய என்.ஈ.சியினரும் ஓவர் முடிவில் 82 ஓட்டங்களையே பெற்றனர். கிருஷ்ணா 27 ஓட்டங்களையும், பிரசாந்தன் 14 ஓட்டங்களையும், தீபன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சுதன் 17 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், குகன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும்,தர்சன் 07ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



படம்:-சங்கர்

இரு அணிகளும் தலா 82ஓட்டங்களைப்பெற்றிருந்தாலும்ஓட்ட விகித அடிப்படையில் என்.ஈ.சி. அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆட்டத்தின் சிறந்த வீரராக என்.ஈ.சி. அணித்தலைவர் கிருஷ்ணாவும், தொடர் நாயகனாக உழவர் ஒன்றிய அணிவீரர் சுதனும் தெரிவாகினர்.தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கிளி.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா, கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் உரையாற்றியதுடன் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவித்தனர். அமரர் சத்திய தர்சன் பூஜாவின் குடும்பத்தினரும் வீர,வீராங்கனைகளுக்குப் பரிசில்கள் வழங்கினர்.

நேற்றைய வலைப்பந்தாட்டப் போட்டிக்கு செல்வி.மனோன் மணி,திருவாளர்கள் சிவனேசன், க.புவனேந்திரராசா ஆகியோரும் துடுப்பாட்டப் போட்டிக்கு திருவாளர்கள் பூ.சுபானந்த், செ.தனபாலன், குமார் ஆகியோரும் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

## வீரர்களின் பெயர்ப்பட்டியலை ஒப்படைக்கக் கோரிக்கை

கிளி.மாவட்டத்தைச் சேர்ந்த சகல விளையாட்டுக்கழகத்தினரும் தமது கழகத்தைச் சேர்ந்த சகல வீரர்களின் பட்டியலையும், அவர்களின் புகைப்படங்களையும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ விளையாட்டுத்துறையில் ஒப்படைக்குமாறு கிளி.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். இப்பட்டியலில் இடம்பெறாத எந்த வீரவீராங்கனைகளும் 2005 ஆம் ஆண்டில் எந்தப்போட்டிகளிலும் பங்குபற்ற முடியாது. என்பதால் தவறாது இப்பட்டியலையும், புகைப்படங்களையும் ஒப்படைக்குமாறு அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (சோ)


### புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் அனைவருக்கும் பயன் தரக்கூடிய விதத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்ற புத்தகக்கண்காட்சியும், விற்பனையும், நூலகங்கள், பிரதேச சபைகளின் பயன்கருதி டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. சிற்பம், வைத்தியம் உள்ளிட்ட பல புதிய வெளியீடுகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-2222573

(சி-11038)

### தவறிவிட்டது

செல்லையா பத்மநாதன் முழங்காவில் தனது மகளின் (திருமணமாகி மூன்று நாட்கள்) தாலிக்கொடி நேற்று 23.12.2004 முழங்காவிலில் இருந்து கிளிநொச்சி பூநகரி ஊடாக வரும் போது இடையில் தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் மனிதாபிமான, ரீதியில் ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி. அல்லது மேற்குறித்த நபரிடம் ஒப்படைக்கவும். உயர்ந்த சன்மானம் வழங்கப்படும். தகவல் :- செபத்மநாதன் (5441)



# VACANCIES

# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications From suitably qualified persons For the Under mentioned posts

## FACULTY OF ARTS

Senior Lecturer Grade I/Senior lecturer Grade II/Lecturer (probationary) in Linguistics / Education (Specialized in Applied Science)

Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Art & Design/ Fine Arts (Specialised in History of Art and Art Criticism)

Senior Lecturer Grade II(On Contract) in English Literature

Assistant Lecturer (On Contract) in Anthroplogy/ Art and design/christian Civilization/ Dance(Bharathanatiyam/Vocal/ Miruthangam)/Music(Vocal/Veena/Violin/Miruthangam/ Pannisai)/Drama&Theatre Arts/ Economics/Fine Arts/Geography/Hindu Civilization/ HinduPhilosophy/Political Science /Psychology/Philosophy/Sociology Tamil/Linguistics/Sanskrit/Planning(Specialized in Social Planning or in Sociology)

Tutor in Geography/ History/Archaeology

Instructor( On Contract) in Music(Vocal/Veena/Violin/Miruthangam/Pannisai) Dance (Bharathanatiyam/Vocal/ Miruthangam)/Art and Design

Visiting lecturer in * English Literature/ ** French/Home Economics/Art & Design
*Preferable fields: SriLankan Writers/Literary Women/ Contemporary South Asian Literature/Women Novelist/English translation of Modern Literary Works

** Perference will be given to those who have competense in teaching French

Visiting Instructor in English (English Language Teaching Centre)/ Art & Design/Music/

**Department of Law**

Senior Lecturer Grade I(On Contract)/Senior lecturer Grade II (On Contract)/Assistant Lecturer(On Contract) in Law

Visiting Lecturer in Law

## FACULTY OF AGRICULTURE

Assistant Lecturer (on Contract) / Demonstrator (on Contract) in Agronomy/ Agricultural Biology/Agricultural Chemistry / Animal Science /Agricultural Economics/ Agricultural Engineering

## FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

Assistant Lecturer (on Contract) in business Administration / Commerce
Visiting Lecturer in Law ( Civil, industrial, Commercial)

| Post | Salary |
|---|---|
| Senior Lecturer Grade 1 | Rs. 23.650-8x525-32.890/-p.m |
| Senior Lecturer Grade II | Rs. 20.160-5x525-22.785/-p.m |
| Lecturer (Probationary) | Rs. 13.070-1x375-9x415-17.180/-p.m |
| Assistant Lecturer (on Contract) | Rs. 12.050/-p.m Fixed |
| Tutor (On Contract ) Instructor (On Contract) | Rs. 10.250/-p.m Fixed |
| Visiting Lecturer | Rs. 500/-per hour |
| Visiting Instructor | Rs. 250/-per hour |

**In addition** to tha above salary an academic allowance of 30% of the salary and other allowances approved by the University Grants Commission will also be paid to the posts of senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary)

**Statutory benefits for permanent staff**

i. Sabbatical leave entitlement for the holder of the post of senior Lecturer Grade I/II
ii. Gratuity payments
iii. Membership in Universities provident fund and pension Scheme in the University System
iv. Employees trust fund benefits
v. Free medical Services

**Benefits to the staff appointed on Contract**

i. Membership in Universities Provident fund in the University System
ii. Employees Trust fund benefits

Closing date applications for the Permanent posts of Senior Lecturer Grade I Senior Lecturer Grade II and Lecturer (Probationary) will be on **17.01.2005** and other posts will be on **10.01.2005**

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar Establishments. University of Jaffna, Sri Lanka. either in person or by sending a money order for Rs.20 /=per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal order drawn in favour of the 'Bursar.university of Jaffna together with a self addressed stamped envelop 23 x 30 cm.in size.

Those who wish to apply for **more than one post** should apply in separate forms for each post /field.


Applicants from the University of Jaffna System Government Departments/Corporations and statuory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without information.

**Registrar,**
**University of Jaffna,**
**Sri Lanka.**
**2004.12.21**

(சி-11153)

# 6 ஆம் மாத நினைவு நாள் அழைப்பு



எமது இணை பிரியா நண்பன்

## அமரர் சச்சிதானந்தசிவம் ஞானசீலன்

அவர்களின் 6ஆம் மாத நினைவு நாள் வைபவம் 25.12.2004 சனிக்கிழமை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (இல: 853,ஆறுமுகம் வீதி,வட்டக்கச்சி) ஒழுங்கு செய்திருப்பதால் அந்நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

(5438) -நண்பர்கள்-

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## பருவகாலச்சீட்டுப் பெறுவோர் கவனத்திற்கு

* 01.01.2005 ஆம் நாளிலிருந்து பேருந்துக் கட்டணத்தில் 75% பணத்திற்கு பருவகாலச்சீட்டு வழங்கப்படும். இதனைப் பெறவிரும்புவோர் பணிசெய்யும் நிறுவனப் பொறுப்பாளர் அவர்களுக்கு கடிதம் எழுதி, அவரால் அக் கடிதத்தில் நிறுவன முத்திரை பொறிக்கப்பட்டு பரிந்துரை செய்த கடிதத்தினை சீட்டுப் பெறும் இடங்களில் கையளித்தல் வேண்டும்
* பாடசாலை மாணவர்களுக்கு அதிபர் அவர்களின் பரிந்துரைக் கடிதத்துடன் வழமை போல் உருபா 25/= பணத்திற்கு வழங்கப்படும்.
* ஒவ்வொரு மாதமும் 25 ஆம் நாள் தொடக்கம் 30 ஆம் நாள் வரை பின்வரும் இடங்களில் உள்ள நேரக்கணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

01. முல்லைத்தீவு பேருந்து நிலையம்
02. புதுக்குடியிருப்பு பேருந்து நிலையம்
03. பளை பேருந்து நிலையம்
04. கிளிநொச்சி பேருந்து நிலையம்
05 புளியங்குளம் பேருந்து நிலையம்
06. மல்லாவி பேருந்து நிலையம்
07. வெள்ளாங்குளம் பேருந்து நிலையம்
08. உ.யிலங்குளம் பேருந்து நிலையம்

தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-10991)


Tv, Radio, VCD,DVD, Playars, அம்பிளிபயர் செற்,ஒலிபெருக்கி, டிஸ் அன்ரனாஉட்பட சகலவகை அன்ரனா வகைகள்,
Kyocera Solar System, DC பல்ப், DC TV, டெக் வகைகள் மின் விசிறிகள், இன்வெட்டர்கள் மற்றும்
சகலவகை மின்னியல், இலத்திரனியல் பொருட்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# இளந்துளிர் மின்னியல் பொருள் வாணிபம்

ராஜன் பில்டிங் ~ யாழ்சாலை, கிளிநொச்சி.







(சி-1039)

எமது தேசத்தின் விடுதலைக்காய் இயேசுக்கிறிஸ்துவின்

# சமாதான நற்செய்திப் பெருவிழாவும் இயேசுவின் பாதத்தில் முழு இரவு வேண்டுதல் பிரார்த்தனையும்

இருண்டு கிடக்கும் எமது தேசத்திற்கும் சமாதானம் இல்லாமல் தவிக்கும் அனைவருக்கும் தீராத வியாதியிலும் செய்வினை சூனியத்திலும் குடும்பத்தின் சமாதான இன்மையிலும் பாவத்திலும் சாபத்திலுமிருந்து
இயேசுக்கிறிஸ்து விடுதலையும், சமாதானமும் தருகிறார்
தேசத்தின் சமாதானத்திற்காக விசேஷ பிரார்த்தனை நடைபெறும்.

இடம் : இயேசுக்கிறிஸ்து பூரணசுவிஷேச சபை றெட்பானா விசுவமடு.
காலம் : 31–12–2004 01–01–2005 (வெள்ளி, சனி)
நேரம் : இரவு 10.00·மணி தொடக்கம் அதிகாலை 5.00 மணி வரை

செய்தியாளர் : சுவிஷேசகர் யு.ஏ. பர்னபா


இயேசு சொன்னார் :- நீங்கள் மனம் பொருந்தி செவிகொடுத்தால் தேசத்தின் நன்மையை புசிப்பீர்கள் ஏசாயா 1:19எழுந்திரு இராத்திரியில் முதல் சாமத்தில் கூப்பிடு ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தை தண்ணீரைப்போல் ஊற்றிவிடு புலம்பல் 3.19 மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்த இயேசுக் கிறிஸ்து உங்களுக்கும், குடும்பத்திற்கும், தேசத்திற்கும் விடுதலை தருவார்.

வாருங்கள் வந்து பாருங்கள் சமாதானத்தையும், விடுதலையும் பெறுங்கள்.

ஜெபத்தேவைக்கு
இயேசுக்கிறிஸ்து பூரணசுவிஷேச சபை
றெட்பானா விசுவமடு
T.P.0776728400

(11154)

15ஆம் ஆண்டு



# ஒரு கொடியில் பூத்த இரு மலர்களின் நீங்காத நினைவலைகள்

12ஆம் ஆண்டு



நாட்டுப்பற்றாளர்
பொன்னுத்துரை
முருகமூர்த்தி (ராசா)

மலர்வு : 28-01-1965
உதிர்வு : 26-08-1989

முல்லைத்தீவு கோட்ட
சிறப்புத் தளபதி
மேஜர் செங்கோலன்
(செங்கோல் மாஸ்ரர்)

பொன்னுத்துரை பாலமுருகேஸ்
பிறப்பு : 05-08-1966
வீரச்சாவு : 24-12-1992

அண்ணனும் தம்பியும் அடுத்தடுத்துப் போனீர்கள்
ஆறாத துயரத்தில் எமை விட்டுப் பிரிந்தீர்கள்
தமிழீழ விடிவிற்காய் உமதுயிரைக் கொடுத்தீர்கள்
தமிழ் மக்கள் வாழும் வரை அவர்கள் நெஞ்சில் நிலைப்பீர்கள்.

"றெசி வாசா"
சங்கத்தார் வயல்
இயக்கச்சி.

(5431)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்த பின் அரச ஊடக பணியாளர் மீது விசாரணை மேற்கொள்ளப்படும்

## – ஐ.தே.க. பிரமுகர் ராஜித சேனாரட்ன

(கொழும்பு)

அரச ஊடகங்களில் தற்போது கடமையாற்றும் அனைவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் உரிய விசாரணைகள் நடத்தப்படும். அதில் குற்றம் காணப்படுபவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர் தமது அரசாங்கம் பதவியில் இருந்த காலத்தில் ஊடகம் உரிய முறையில் செயற்பட்டு வந்தது எனினும் தற்சமயம் அங்கு எதிர்க் கட்சிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் மாத்திரமே மேற்கொள்ளப் படுகின்றன. எனவே அரச ஊடகங்களில் எதிர்க்கட்சிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை எழுதுபவர்கள் மற்றும் அதனை வாசிப்பவர்கள் ஆகியோருக்கு எதிராகவே ஐக்கிய தேசியக் கடசியின் ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார்.

அண்மையில் இந்தியக் கலைஞர்கள் பங்கேற்ற இசை நிகழ்வில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு இடம்பெற்றவுடனேயே அரச ஊடகம் அது ரவி கருணாநாயக்க வின் செயல் எனத் தெரிவித்தது. எனினும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக முக்கிய தகவல்களைத் தருவோருக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனக் கூறியுள்ளார் அரச ஊடகம் கூறியது உண்மையாக இருந்தால் ரவி கருணாநாயக்கவே இதற்கான காரணம் எனக்கூறி பொலிஸ்மா அதிபர் தெரிவித்த 10 இலட்சம் ரூபாவை அரசாங்க ஊடகமே பெற்றுக் கொள்ளலாமே?

சர்வதேச சமூகத்துக்கு அரசாங்கம் கூறிவந்த பொய்களுக்கு தற்சமயம் முடிவு ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் பலபொய்களைக் கூறியே பதவிக்கு வந்தது. எனினும் அது கடந்த வாரம் சர்வதேச நாடுகள் காட்டிய எதிர்ப்புக்காரணமாக வெளிச்சத்துக்கு வந்தது. இந்த நிலையில் அரசாங்கம் மேலும் பொய் கூறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் ராஜித சேனாரட்ண தெரிவித்தார். (32)

## உரும்பிராயில்...

நிகழ்வு நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் குலேந்திரன் தலைமையில் உரும்பிராய்ப் பகுதியில் அவர்களது நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் இடம்பெற்றது.
இந்நிகழ்வின் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்து தேசியக்கொடியினை கோப்பாய்ப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். நிகழ்வுகள் யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் குலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் மேஜர் முரளியின் தாயார் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.(36)

## புது. மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கு

முல்லை வலயக் கல்விப்பணிமனை மொறட்டுவ பல்கலைக் கழக பொறியியல்பீட மாணவர்களின் உதவியோடு வன்னிப்பிரதேச க. பொ. த (உயர்தர) விஞ்ஞான பீட மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ள விஞ்ஞான வகுப்புக்கான கருத்தரங்கும் தொழில்சார் கற்கை நெறி வழிகாட்டலும் தொடர்பான கருத்தரங்கு இன்று பிற்பகல் தொடக்கம் 27 ஆம் திகதி வரை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.இது முல்லைத்தீவு ம.வி.யில் இடம்பெற மாட்டாது.

## டைனமற்...

மீன்பிடிப்பவர்களின் தொகை என்றுமில்லாதவாறு யாழ்ப்பாணம், மன்னார், கடற்பகுதிகளில் அதிகரித்துள்ளது இதனால் கடல் அசுத்த மடைவதோடு பெருமளவான கடல் வளங்களும் அழிக்கப்படுகிறது. எனவே இதனால் டைனமற் வெடி மருந்தைப் பயன்படுத்துவது வட தமிழீழக் கடற்பரப்பில் இன்று முதல் தடைசெய்யப்படுவதாகவும். இதனையும் மீறி இதனைப் பாவிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில். யாழ், பூநகரி, மன்னார் கடற்பரப்பில் இழுவைப்படகில் மீன் பிடிப்பதை நிறுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. கடந்த கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டது போல றோலர் இழுவைப்படகுகளை இம்மாதம் 31 ஆம் திகதியுடன் மீன் பிடிக்குப்பயன்படுத்தாது நிறுத்துவது என்ற தீர்மானம் தவிர்க்கமுடியாத காரணத்தால் மாசிமாதம் முதலாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்ற முடிவு சபையோரின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இழுவைப்படகைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடுவர்கள் கச்சதீவுக்கு அப்பால் சென்று ஒருமாத காலம் தொழில் செய்ய முடியும். இதற்குட்பட்ட பகுதிகளில் இழுவைப் படகுத்தொழில் செய்கின்றவர்கள் மீனவர்களுக்கு இடையூறு விளைவிப்பார்களாக இருந்தால் அவர்களது இழுவைப்படகுகள் இனங்காணப்பட்டு தொழிலால் நிறுத்திவைக்கப்படும்.

இதேவேளை இழுவைப்படகு வரும் மாசிமாதம் முதல் முற்றாக நிறுத்தப்படும்போது இவர்களுக்கான இழப்பீடாக இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத பெறுமதி உடைய மீன்பிடி வலைகள் வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் விரைவாகச் செயற்பட்டு வருகிறது. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களைத் தவிர்ப்பதற்கும் எமது கடல்வளத்தைத் தொடர்ந்து பாதுகாப்பதற்காகவும்தான் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது எனவும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளத்தின் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.
இக் கலந்துரையாடலில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன மேலாளர் மோகன்,யாழ்.மாவட்ட கடற்றொழிலாளா சம்மேளனச் செயலாளர் சூரியகுமார்வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலர் சனீசியஸ், வடமராட்சி வடக்கு, கிழக்கு சம்மேளன மேலாளர் கங்கை அழகன், மன்னார் மாவட்ட மீனவர் சங்கத்தினா், பூநகரி சமாசத்தினர் என 40 வரையானவர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் குருநகர், கொழும்புத்துறை, பாசையூர் ஆகிய கரையோரப் பகுதிகளிலும், மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளிலும்" கடற்புலிகளின் வேண்டுகோள்" என்ற தலைப்பில் எமது கடல் வளத்தைப் பாதுகாக்கும் முகமாக டைனமற் வெடிமருந்து பாவித்து மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறி டைனமற் வெடி மருந்து பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் என்ற வாசகங்களைத் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன (லோ.ச)

## சமாதானப்...

பரந்தன்,கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களின் பிரதேச வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மேற்படி கலந்துரையாடலில் சமகால அரசியல் நிகழ்வுகள் தொடர்பான கருத்துரைகள் இடம்பெற்றன. கிளி/வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அமிர்தலிங்கம்,கிளி/தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, கிளி/மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன், தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் பார்த்தீபன் ஆகியோரும் ,பிரதேசங்களின் பிரதிநிதிகளும் கருத்துரை வழங்கினர்.
தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக சி.கணேசலிங்கம் அவர்கள் கருத்துக் கூறினார். இறுதியாக இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.(சோ,சு)

# சாவு அறிவித்தல்

## முருகன் முத்துத்தம்பி

அனிஞ்சியன்குளம் மல்லாவியைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகன் முத்துத்தம்பி அவர்கள் 23-12-2004 நேற்றுக் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், கைலாயபிள்ளை பஞ்சாட்சரம், அருள்மணி (அனிஞ்சியன்குளம்), புவனேஸ்வரி (விவசாயப் போதனா ஆசிரியர் துணுக்காய்), புஸ்பவதி (கிராம சேவையாளர் மானிப்பாய் மேற்கு), பரராஜசிங்கம் (அனிஞ்சியன்குளம்), கோபி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, தங்கம்மா கந்தசாமி, சிவபாலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசன திணைக்களம் வவுனிக்குளம்), சிவபுண்ணியம் (விவசாயப் போதனா ஆசிரியர்), இராஜலட்சுமி (ஆசிரியர் அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயம்), சுமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 25-12-2004 சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அனிஞ்சியன்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
மு.பரராஜசிங்கம்,
(மகன்)

(4144)

# முன்னாள் இந்.பிரதமர் நரசிம்மராவ் மாரடைப்பால் மரணம்

(புதுடில்லி)



இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் (83 வயது) நேற்று மரணமானார் இவர் மூச்சுவிடுவதற்கு கஷ்டப்பட்டதனால் இம் மாதம் 09 ஆம் திகதி டில்லி வைத்திய சாலையில் அனுமதிகப்பட்டு, மாரடைப்பின் காரணமாக உயிரிழந்தார் என அவரது உதவியாளர் தெரிவித்துள்ளார். 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் தலைமையிலான சிறுபான்மை அரசாங்கம் ஒன்றிற்கு அவர் தலைமை தாங்கினார் 1996 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அரசியல் வாழ்வில் இருந்து அவர் ஒதுங்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## யுனிசெப்...

கால மழை வெள்ளப் பெருக்கின் விளைவுகள்,தமது வாழ்விடங்களில் இராணுவத்தினரால் மறுக்கப்பட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கள் குடும்பங்களுடன் வசிக்கும் பிள்ளைகள் போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது. 2005 இற்கான யோசனைத்திட்டமும் மாவட்டமட்டக் குழுக்களைப்பலப்படுத்தும் திட்டம் அதாவது பெற்றோருடன் ஒத்து நடத்தலும், பாடசாலைசெல்லல்,போசாக்கு போன்ற விடயங்களிற்கு உதவிகளை ஒதுக்கல் போன்ற விடயங்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் விளக்கினார்.
இச்சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளருடன் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் தங்கன்,சிறுவர்களிற்கான விசேட குழு உறுப்பினர் பரணி,சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இராணுவத்தின்...

மதிக்க முடியாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிப் பெண் போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இந்த இடுப்புப் பட்டியுடன்தான் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஏற்கனவே இப்படியான பயணங்களின் போது கூட இந்த இடுப்புப் பட்டி அணிந்தவாறே இவர்கள் பயணம் செய்துள்ளார்கள். இப்படியான சூழ்நிலையில் இராணுவ அதிகாரியொருவரின் இந்தப் புதிய அணுகுமுறை அநாகரிகமான செயல் என விடுதலைப் புலிகள் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பீடம் இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்ட போதிலும் பயணத்தைத் தொடர்வதற்குச் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. நான்கு மணி நேரம் இந்த இழுபறி நிலை நீடித்தது. இறுதியில் இராணுவ தலைமையகத்திலிருந்து வந்த உத்தரவின் பேரில் பயணம் ரத்துச் செய்யப்பட்டது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் தமது வன்மையான கண்டனத்தையும். அதிருப்தியையும் வெளியிட்டுள்ளார். எமது பெண் போராளிகள் அமைப்பின் சட்ட திட்டத்திற்கு அமைய இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடுப்புப்பட்டி அணிந்து அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபடுவது புதிய விடயமல்ல.இராணுவம் நடந்துகொண்ட விதம் ஒரு அநாகரிகமான அணுகுமுறை. திட்டமிட்டு எமது போராளிகளை அவமதிக்கும் வகையில் நடந்துள்ள்து என்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## புலிகளின்...

சியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சென்றபோதே எழிலனும் ஏனைய அரசியல் போராளிகளும் தடுக்கப்பட்டனர். கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமடியில் சுமார் இரண்டு மணி நேரம் வரை எழிலன் மறிக்கப்பட்டிருந்தார்.நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று உந்துருளிகளில் எழிலனும் ஏனைய அரசியல் போராளிகளும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களைப் பார்க்கவும் மக்களுக்கு நிவாரண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் சென்றபோது மஹிந்தபுர இராணுவக் காவலரணில் வைத்துப் படையினரால் தடுக்கப்பட்டார்.

இச்சம்பவங்கள் குறித்து எழிலன் மேலும் கூறுகையில், எங்களின் அடையாள அட்டைகளைக் காட்டினோம். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடச் செல்கின்றோம் என்று படையினரிடம் கூறினோம்.

படையினரோ மேலதிகாரிகளின் அனுமதி பெற்று ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்திற்குச் செல்ல அனுமதிக்க முடியும் என்றும் கூறினார்கள். அவர்கள் தங்களின் தகவல் சாதனம் மூலம் உயரதிகாரிகளின் அனுமதி பெற்ற பின்னரே எம்மை எமது பயணத்தைத் தொடர அனுமதித்தனர். அதுவரை நாம் காவலரணில் நிறுத்தி வைக்கப்பட்டோம் என்று எழிலன் தெரிவித்தார். கட்டைப் பறிச்சான் இராணுவக் காவலரணிலும் இவ்வாறுதான் தாம் தடுக்கப்பட்டதாகவும் எழிலன் கூறினார்.

இராணுவ உயர் அதிகாரிகளுடன் நாம் சந்திப்புக்களை நடத்திப் பேசுவதால் பயனில்லை என்பதை உணர்த்துவதாக படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அமைந்துள்ளன என்பதை இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கண்காணிப்புக் குழுவினரின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவந்துள்ளோம் என்று எழிலன் தெரிவித்தார். ஈச்சிலம்பற்றுப் பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. (25)

எங்கே போனால்
ஆங்கிலம் கதைக்கலாம்?
இங்கிலிஷ் வேர்க்ஷொப்
[கோவிந்தன் கடைச்சந்தியருகே]
புதிய பிரிவு
27.12.2004
காலை 7.00 மணிக்கு ஆரம்பம்
(சி-11152)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது